# முகவுரை

நவ இந்தியாவின் பெருமை என்பது அது உலகின் பெரிய ஜனநாயக நாடு என்பதில் மட்டுமல்ல, பஞ்சாயத்து ராஜ் அமைப்பின் மூலம் நாம் நிர்வாக பங்களிப்பில் அனைத்து மட்டங்களிலும் கட்டமைத்துள்ள வழிமுறைகள் நமது ஜனநாயகத்தை எவ்வளவு துடிப்புடன் உயிர்ப்பாக வைத்துள்ளது என்பதில்தான் அடங்கியுள்ளது. இந்த வழிமுறையானது உள்ளூர் மற்றும் தலமட்டத்திலும் , மாநில மற்றும் தேசிய அளவிலும் ராஜிய பரிபாலனத்தில் உலகிலேயே அதிக அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்பதை உறுதி செய்கிறது. தேசிய அளவில் இந்திய தேர்தல் ஆணையம் வெறும் பிரதிநித்துவம் என்ற அளவில் மட்டுமல்லாது உலகின் மிக சுதந்திரமான பங்களிப்பாகவும் அது இருப்பதை உறுதி செய்கிறது.இப்படிப்பட்ட ஒரு ஜனநாயக அமைப்பில் வெளிப்படைத் தன்மையும் , பொறுப்பேற்றலும் ஒரு நல்ல ஆரோக்கியமான சூழல் அமைவதை உறுதி செய்கிறது. இந்திய அரசியல் அமைப்பு சட்ட விதி எண் 324 ன் கீழ் அமையப்பெற்ற இந்திய தேர்தல் ஆணையம் 2005ம் ஆண்டில் அமுல் செய்யப்பட்ட தகவல் உரிமைச் சட்டம் வகுத்துள்ள கட்டமைப்புக்குள் சிவில் சமூகத்துடன் சேர்ந்து பணியாற்றுவதை உறுதி செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு வெளிப்படையான அரசாங்கம் இருப்பதை உறுதி செய்யும் ஒரு தேசிய கடப்பாடாக வெளிப்படும் தகவல் உரிமைச் சட்டம் நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மை இருப்பதை அனைவரையும் பொறுப்பேற்க வைப்பதன் மூலம் நிறுவ முயல்கிறது. ஆளும் கட்சி உட்பட அனைத்து அரசியல் கட்சிகளும் இதனை தங்கள் தேர்தல் அறிக்கையின் ஒரு பகுதியாகக் கொண்டிருப்பது வியப்பளிக்கும் விடயமில்லை. கவலைப்படக்கூடிய பிரச்சினைகள் குறித்து அரசுக்கும் பொதுமக்களுக்கும் தெரியப்படுத்துவதில் நமது குடிமக்கள் தொடர்ந்து தேர்தல் ஆணையத்துடன் இணைந்து பணியாற்றி வருகிறார்கள். இந்த சூழலில்தான் மின்னணு வாக்கு சாதனம் மற்றும் வாக்காளர் ஒப்புகை சீட்டு இயந்திரம் இயங்கும் முறை பற்றிய ஒரு ஆராய்ச்சியினை நாம் இந்த பிரசுரம் மூலம் முன்வைக்க முயல்கிறோம். இந்த புத்தகத்தின் முன்னுரையில் தெளிவுபடுத்தியுள்ளது போல், இன்றைய பாரதம் இப்படி அமைவதற்கு காரணகர்த்தர்களாக நமது பிரஜைகள் தங்கள் அரசுப் பணிகளில் பெரிய உயரங்களிலும் சிறிய வழிகளிலும் ஏதாவது ஒரு வகையில் பங்கேற்றுள்ளார்கள். இந்திய அரசியலமைப்பு சட்டத்தை வேதமாகக் கருதும் அவர்களுக்கு , பாரபட்சமற்ற தன்மையே தனது பெரும் பலம் என்று எப்போதும் இருந்து வரும் இந்திய தேர்தல் ஆணையம் 2019 பாராளுமன்ற தேர்தலினை நடத்திய விதம் மூலம் அதன் பாரபட்சமற்ற தன்மையும் நேர்மையுமே சந்தேகத்திற்கு உரியதாக ஆகி விட்டது கவலையளிப்பதாக இருக்கிறது. எதிர்பார்க்கப்படும் நடுநிலைத் தன்மையில் இருந்து இந்திய தேர்தல் ஆணையம் விலகி இருப்பது போல் தோன்றுவதை வெகு ஜனங்கள் கவனத்திற்கு வருத்தத்துடன் முன்வைக்கும் பணியினை மேற்கொண்டுள்ள சிவில் சொசைட்டி அமைப்புகளில் ஜனநாயக சீர்திருத்தக் கூட்டமைப்பு, முன்னாள் சிவில் அலுவலர்கள் நிரம்பிய அரசியலமைப்புப்படியான நடத்தைக் குழு, மற்றும் வாக்காளர் ஒருமைபாட்டு அமைப்பு ஆகிய அமைப்புகள் மேற்கொண்டுள்ளன. மாதிரி நடத்தை விதிகளை தீய நோக்கத்துடன் மீறப்பட்டு வரும் இந்த அவல நிலையைக் கண்டித்து ஏராளமான அரசியல் கட்சிகளும், முன்னணி ஊடகங்களும் இணைந்து குரல் எழுப்பி வருகின்றன. இதற்கு முன்பே பல தேர்தல்களை நடத்தியுள்ள அனுபவம் மிக்க பொறுப்புள்ள பல சிவில் அதிகாரிகள் எழுப்பும் குற்றச்சாட்டுக்கள் மற்றும்

விமரிசனங்கள் குறித்து இந்திய தேர்தல் ஆணையம் எந்தவிதமான பதிலும் கொடுக்காமல் ஒரு எதிர்வினையும் ஆற்றாமல் உள்ளது.

தேர்தலுக்கான பிரஜைகள் ஆணையம் (The Citizens' Commission on Elections' (CCE) தேர்தல் நடத்தும் விதம் குறித்து விவாதிக்கவும் தேவைப்படும் சமயத்தில் பொருத்தமான வகையில் நிபுணர்கள் ஆலோசனை பெறவும் உருவாக்கப்பட்டது. இந்திய குடிமகன்களின் பார்வைக்கு இவை பொது வெளியில் பகிரப்படவேண்டும். அவர்களே பெருமை மிக்க இந்தியக் குடியரசினை நிர்வகிக்க நடத்தப்படும் தேர்தல் எப்படி தரம் மிக்கதாக இருக்க வேண்டும் என்பது பற்றி இறுதி மொழி சொல்பவர்களாக இருக்க வேண்டும்.

மின்னணு வாக்கு சாதனம் மற்றும் வாக்காளர் ஒப்புகை சீட்டு இயந்திரம் இயங்கும் முறை பற்றிய வெளிப்படைத்தன்மை தேவை குறித்து வெளியாகி உள்ள முதல் அறிக்கை பொது வெளியில் விவாதத்திற்கு வைக்கப்பட தயாராக உள்ளது. மின்னணு வாக்கு இயந்திரங்களின் பயன்பாடு மற்றும் , குறிப்பாக ஜனநாயகக் கோட்பாடுகள் சார்ந்து அவை எப்படி பயன்படுத்தப்படுகின்றது என்பது பற்றி தேர்தலுக்கான பிரஜைகள் ஆணைய நிபுணர்கள் ஆய்வு செய்துள்ளார்கள்.. ஒரு வாக்காளர் தனது தெரிவு எந்த வித மாற்றமும் இன்றி சரியான விதத்தில் பதிவாகிஉள்ளது , அவ்வாறே எண்ணப்படுகிறது என்பதனை சட்டதிட்டங்களுக்கு ஏற்ப அறிந்து கொள்ளும் விதத்தில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. வாக்களிக்கும் முறையானது எளிதில் இருக்க வேண்டும் என்பதும் தகவல் தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தி எந்த வித உள்ளடி வேலையும் நடக்காமல் வாக்காளர் தனது வாக்கினை எளிதில் சரிபார்க்க வழிமுறைகள் இருக்க வேண்டும் என்பதும் கட்டாயமாக்கபடுகிறது.

வாக்காளர் தேர்வு செய்வதில் எந்த வித தவறோ, குளறுபடியோ அனுமதிக்கப்பட்டால் அது இந்திய ஜனநாயகத்தின் சாரத்தையே சமரசம் செய்து கொண்டு நம் அரசியல் அமைப்பு சட்டத்தை கைக்கூலிகள் வசம் ஒப்படைத்து விடுவதற்கு சமம் என்று நாங்கள் கருதுகிறோம். இறுதியாக வாக்காளரின் தெரிவு நம்பிக்கையான முறையில் பிரதிபலிக்கப்பட்டு உள்ளது என்பதை உறுதி செய்ய தேசிய மற்றும் சர்வ தேச நிபுணர்களின் கருத்துகளை இந்த அமைப்பு கணக்கில் எடுத்து உள்ளது. ஆரம்ப கட்டத்தில் உற்சாகமாக வரவேற்கப்பட்டாலும், பின்னர் ஏன் தகவல் தொழில் நுட்பத்தில் வெகுவாக முன்னேறிய நாடுகள் கூட தேர்தல் சமயத்தில் மின்னணு வாக்கு இயந்திரத்தை பயன்படுத்துவதில்லை என்பதை இது தெளிவாக்குகிறது.

இந்தியா மட்டுமன்றி, உலக அளவில் உள்ள அனைத்து ஜனநாயக சக்திகள் முன்பாகவும் , தொழில் நுட்பப் புரட்சியின் வெளிச்சத்தில் ஜனநாயக செயல்பாடுகள் எவ்வாறு பாதுகாக்கப்படவேண்டும் என்பதை அளந்து கொள்ளும் விதமாக, இதோ இந்த சிபாரிசுகள் உங்கள் முன் சமர்ப்பிக்கபடுகிறது.

.... மதன் லோகுர்......

--- வஜாகத் ஹபிபுல்லா..

பத்திரிக்கை குறிப்பு

**PRESS RELEASE**

வரவிருக்கும் தேர்தலை ஒட்டி நடைபெற உள்ள தேர்தல் நடைமுறைகளின் மீது வாக்காளர்கள் வைத்துள்ள நம்பிக்கைகள் காப்பாற்றப்பட வேண்டும்..

ஜனநாயகக் கோட்பாடுகளுக்கேற்ப மின்னணு வாக்கு இயந்திர செயல்பாடுகள் இருக்க வேண்டும்..

தேர்தலுக்கான பிரஜைகள் ஆணையம்( Citizens' Commission on Elections (CCE) வேண்டுகோள்.

ஒரு ஆரோக்கியமான ஜனநாயகத்தில் , தேர்தல் நடைமுறைகளில் அந்த தேசத்தின் குடிமக்கள் துடிப்பான பங்காற்ற வேண்டியுள்ளது. இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் பிரிவு 324 ன் கீழ் உருவாக்கப்பட்ட இந்திய தேர்தல் ஆணையம் பல தடவை ஜனநாயகத்தை வலுபடுத்தும் உறுதி பூண்ட சுதந்திரமான அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றி உள்ளது. இது மாதிரியான குடிமக்கள் அமைப்புகள் ஆணையத்திற்கு மதிப்புறு ஆலோசனைகள் வழங்கி வந்தது மட்டுமன்றி கவலை தரத் தக்க நிகழ்வுகளின் போது உரிய அபாய எச்சரிக்கைகளையும் வழங்கி வந்துள்ளார்கள்.

2019 நாடாளுமன்றத் தேர்தலினை தேர்தல் ஆணையம் நடத்திய விதம் பெரிய அளவில் சச்சரவினை உருவாக்கி அதன் நடு நிலைத் தன்மையே பல அமைப்புகளால் ஆதாரங்களுடன் கேள்விக்குள்ளாக்கப்பட்டது வருத்தமளிப்பதாக இருக்கிறது. ஜனநாயக சீர்திருத்த அமைப்பு, முன்னாள் சிவில் அதிகாரிகளின் அரசியல் நிர்ணய நடத்தை அமைப்பு, நேர்மையான வாக்களிப்பாளர் இயக்கம், டில்லி அறிவியல் கழகம், அமன் பிரடரி டிரஸ்ட், மக்களே முதன்மை அமைப்பு, பொருளாதார பொறுப்பேற்பிற்கான மையம், ஆகிய அமைப்புகளை உள்ளடக்கிய பல பொது நல அமைப்புகள் தேர்தல் ஆணையத்தின் நடு நிலை பிறழ்வு குறித்தும் மின்னணு வாக்கு இயந்திரத்தின் நம்பகத்தன்மைஇன்மை குறித்தும் பொது மக்கள் கவனத்திற்கு கொண்டு வரும் நிலைக்கு தள்ளப்பட்டனர். தேர்தல் நடத்தை விதி முறைகளை எப்படி எல்லாம் ஆளும் கட்சியனர் மீறுகின்றனர் என்பதையும், இதனை எப்படி போதுமான அளவில் தேர்தல் ஆணையம் கண்டிக்காமல் இருக்கிறது என்பதையும் குறித்து பல அரசியல் கட்சிகளும், ஊடகங்களும், டிஜிட்டல் மீடியாக்களும் கவலை தெரிவித்து உள்ளார்கள்.

மாறாக, ஏற்கனவே பல தேர்தல் நடத்தி அனுபவமுள்ள முன்னாள் சிவில் அதிகாரிகள் இது குறித்து தெரிவித்த கவலை களுக்கு எல்லாம் எந்த பதிலும் தராமல் தேர்தல் ஆணையம் ஒன்று நீண்ட மவுனத்தினையே பதிலாகத் தந்துள்ளது. அல்லது தனது நிலையினை மூர்க்கத்தனமாக நியாயப்படுத்த முயன்றுள்ளது. தனது தோல்விகளை சுய தரிசனம் செய்து கொள்ள தேர்தல் ஆணையம் தயாராக இல்லை என்பதனை அறிந்து கொண்டு அரசியல் சார்பற்ற பல சிவில் சொசைட்டி அமைப்புகளில் ஆர்வத்துடன் பணியாற்றி வந்த முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரியான திரு எம்.ஜி. தேவசஹாயம் இது குறித்து பல அமைப்புகளுடன் கலந்துரையாடும் முன் முனைவு ஒன்றை எடுத்தார். 2019 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் இது சம்பந்தமாக பல கருத்தரங்குகளும் பொது வெளி விவாதங்களும் நடத்தப்பட்டது. அதன் முடிவில் தேர்தல் நடைமுறைகளில் அனுபவம் கொண்ட முன்னாள் சிவில் அதிகாரிகள் கொண்ட ஒரு நிபுணர் குழு ஒன்று உடனடியாக தொடங்கப்படவேண்டும் என்று ஒரு சேர முடிவெடுக்கப்பட்டது; நாட்டில் தேர்தல்கள் நம்பகத்தன்மையுடனும் நேர்மையாகவும் நடத்தப்படவேண்டும் என்ற குறிக்கோளுடன் முன்னாள் தேர்தல் நிபுணர்கள் ஆலோசனை மற்றும் பொருத்தமான வழிகாட்டுதல்களுடன் தேர்தலுக்கான பிரஜைகள் ஆணையம் The Citizens' Commission on Elections (CCE) இப்படித்தான் ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த 2020 ம் ஆண்டு மார்ச் மாதம் 5 ம் திகதி கீழ்க்கண்ட உறுப்பினர்களுடன் தேர்தலுக்கான பிரஜைகள் ஆணையம் The Citizens' Commission on Elections (CCE) உருவாக்கப்பட்டது.

1. Mr. Justice Madan Lokur, former Supreme Court Judge, Chair
2. Mr. Wajahat Habibullah IAS (Retd), Former CIC, Vice-Chair,[CCG]
3. Mr. Justice Hari Paranthaman, former Madras High Court Judge
4. Prof. Arun Kumar, Eminent Economist
5. Dr. John Dayal, Civil Society Activist

6. Ms. Pamela Philipose, Senior Journalist

7. Dr.Subhashis Banerjee, Professor, Computer Science, IIT, Delhi

8. Member-Convener, Mr. Sundar Burra IAS (Retd), [CCG]

M.G. Devasahayam[People-First and CCG]functioned as the Coordinator of the Commission..

பிரஜைகள் ஆணையம், தேர்தல் சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட பகுதிகளை ஆய்ந்து, அதன் அடிப்படையில் இன்று பொது மக்களுடன் பகிர்ந்து கொள்ளும் அதன் முதல் பகுதி அறிக்கை, மின்னணு வாக்கு இயந்திரம் மற்றும் வாக்காளர் ஒப்புகை சீட்டு இயந்திரத்தின் பாதிப்பு மற்றும் தவறு குறித்து பேசுகிறது. டில்லி ஐ.ஐ.டி. கணினி அறிவியல் மற்றும் பொறியியல் பேராசிரியர் ஆன டாக்டர் சஞ்சீவ பிரசாத் அவர்கள் தலைமையில் இந்த ஆய்வு மேற்கொள்ளபட்டது. அதன் சுருக்கம் இங்கே இணைக்கப்பட்டுள்ளது.

இணைக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஜனநாயக கொள்கைகளின் அடிப்படையில் எந்த அளவு , மின்னணு வாக்கு இயந்திரம் மற்றும் வாக்காளர் ஒப்புகை சீட்டுஇயந்திரம் சரியாக இருக்கிறது என்பதை நிபுணர் குழு ஆய்வுக்கான உரைகல் ஆக எடுத்து கொண்டது. சுருக்கமாக, தனக்குப் பிடித்த ஒருவரை தேர்ந்தெடுக்க ஒரு வாக்காளர் அளிக்கும் வாக்கு எந்த வித மாறுபாடும் இல்லாமல் எப்படி பதியப்படுகிறது மற்றும் வாக்குகள் எண்ணப்படும் வரை எப்படி மாறுபாடு இல்லாமல் பாதுகாக்கப்படுகிறது என்பது குறித்த முழுமையான வெளிப்பாட்டுத் தன்மை வலியுறுத்தப்பட்டுள்ளது. வாக்களிக்கும் முறை புரியும்படியும், சரிபார்க்கும் விதத்திலும், எந்த வித சிக்கலும் இன்றி ஆய்வு செய்யக் கூடிய விதத்திலும் இருக்க வேண்டும் என்பதை ஜனநாயக கோட்பாடுகள் கண்டிப்பாக்குகிறது. வாக்காளரின் தெரிவு தவறாகப் பதிவுற எந்த வாய்ப்பும் இருக்கக் கூடாது. இது குறித்து தேசிய மற்றும் சர்வ தேச நிபுணர்களின் கருத்துகளை இந்த அமைப்பு கணக்கில் எடுத்து உள்ளது. ஆரம்ப கட்டத்தில் உற்சாகமாக வரவேற்கப்பட்டாலும், பின்னர் ஏன் தகவல் தொழில் நுட்பத்தில் வெகுவாக முன்னேறிய நாடுகள் கூட தேர்தல் சமயத்தில் மின்னணு வாக்கு இயந்திரத்தை பயன்படுத்துவதில்லை என்பதற்கான காரணங்களை இது பேசுகிறது. இந்த குழுவில் தங்கள் ஆய்வினைப் பகிர்ந்து கொண்டவர்களில் இவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். .

. Poorvi L. Vora and Bhagirath Narahari of George Washington University, USA;

Alok Choudhary of Northwestern University, USA;

Bappa Sinha of Free Software Movement of India (FSMI);

Subodh Sharma of Computer Science and Engineering and of the School of Public Policy, IIT, Delhi;

S Prasanna, Advocate, Delhi;

Venkatesh Nayak, RTI activist;

KV Subrahmanyam, Professor, Computer Science, Chennai Mathematical Institute, Chenna;

Poonam Agarwal, media-person;

Anupam Saraf, Professor and Future Designer;

MG Devasahayam, activist and retired civil servant.

இவர்கள் தவிர சர்வ தேச அளவில் இந்தத் துறையில் நிபுணர்களாக உள்ள பின்வரும் சான்றோர் கூற்றும் இந்த அமைப்பு பெறும், பெரும் பாக்கியம் கிடைத்தது.

Ronald L. Rivest of the Massachusetts Institute of Technology, Cambridge, USA;

Alex Halderman of the University of Michigan, USA;

Douglas W. Jones of the University of Iowa, USA,;

Nasir Memon of New York University, USA;

Philip B. Stark of the University of California, Berkeley;

Vanessa Teague, Associate Professor, School of Computing and Information Systems, University of Melbourne, Cybersecurity, Australia.

அறிக்கையின் பகுதி 1.1: மின்னணு இயந்திரத்தின் டிசைன் மற்றும் தொழில் நுட்ப விவரங்கள் மற்றும் தேர்தல் சமயத்தில் இந்த இயந்திரத்தின் படிப்படியான பயன்பாடு ஆகியவை விளக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் பகுதி 1.2: அரசியல் ஆதாயம் பெறும் பொருட்டு சர்வதேச அளவில் மின்னணு இயந்திரத்தில் நடத்தப்படும் தவறுகள் மற்றும் குளறுபடிகள் குறித்து பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ள கவலை இங்கே இடம் பெறுகிறது.

அறிக்கையின் பகுதி 2: பாதுகாப்பு வளையத்தின் மீதான நம்பகத்தன்மை, தேர்தலுக்குப் பின் இயந்திரங்கள் பாதுகாக்கப்படும் விதம் பற்றி இந்தப் பகுதி அலசுகிறது. மின்னணு வாக்கு இயந்திரம் மற்றும் வாக்காளர் ஒப்புகை சீட்டுஇயந்திரம் குறித்த தொழில் நுட்ப கட்டமைப்பை ஆய்வதில் பெரும் பகுதி இந்த அறிக்கையின் இந்தப் பகுதியில் இருக்கிறது. எலெக்ட்ரோ மேக்னட் மற்றும் பிற மின்னணு சாதனங்கள் மூலம் ஊடுருவல் நடக்கும் வாய்ப்புகளைத் தடுக்க தேர்தல் ஆணையம் எந்த பாதுகாப்பும் செய்யவில்லை என்பது சுட்டிக் காட்டப்படுகிறது. மென்பொருள் பாதுகாப்பு சாதனம் மற்றும் நவீனமான இன்டல் பிராசசர்கள் கூட இது போன்ற மின்னணு சாதன ஊடுருவல் அபாயத்திற்கு ஆளாகி உள்ளது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஒரு தொகுதியின் வெற்றியினை ஒரு சில இயந்திரங்கள் தலை கீழாக்கி விடும் வாய்ப்பு உள்ளது என்பதால் இந்தக் கவலை முக்கியமான ஒன்றாக உள்ளது. ஒரே தடவைதான் EVM புரோகிராம் செயப்படும் என்பதும் சந்தேகத்திற்கு உரியதாக உள்ளது. சொல்லப் போனால் நவீன EVM அமெரிக்க சர்வதேச நிறுவனம் தயாரித்த MK61FX512VMD12 மைக்ரோ கண்ட்ரோலர்தான் பயன்படுத்துகிறது. இதனது நினைவகம் மறுபடி ப்ரோக்ராம் செயப்படும் விதம் உள்ளது. தேர்தல் ஆணையம் நமது ஈ.வி.எம். பற்றிய தொழில் நுட்ப விவரணங்களை பொதுவான தொழில் நுட்ப ஆய்வுக்கு பொது மக்கள் முன் சமர்பித்தால் மட்டுமே மேலதிக ஆய்வு சாத்தியமாகும்.. தேர்தல் ஆணையத்தின் எந்த ஒரு அதிகாரிக்கும் கணினி பாதுகாப்பு பற்றிய வெளிச்சம் இன்மையால் வெளி ஏஜென்சிகளை நம்பி தவறுதலாக பாதுகாப்பு குறைவான அமைப்பிடம் ஒப்படைத்திருக்கலாம்.

தேர்தல் சமயத்தில் மற்றும் தேர்தலுக்கு முன்பும், பின்பும் வெவ்வேறு படிநிலைகளில் ஈ.வி.எம் செல்லுமிடம் பற்றிய ஆய்வு மற்றும் வாக்கு இயந்திரம் பாதுகாக்கப்படுதல் மற்றும் வாக்கு எண்ணிக்கை, முடிவு அறிவித்தல் ஆகிய விடயங்கள் புலப்படுத்துவது என்னவென்றால் குறிப்பிட்ட ஒரு இடை வெளியில் எவரும் அனுமதியின்றி வாக்கு இயந்திரத்தில் குளறுபடி செய்ய வாய்ப்பு உள்ளது என்பதாகும். வாக்காளர் தேர்ந்தெடுக்கும் நபரே சரிவர இயந்திரத்தில் பதியப்படுவர் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது என்பதையே இந்த கண்டுபிடிப்புகள் தெளிவாக்குகிறது.

.

எனவே கள நிபுணர்கள், இந்திய தேர்தல் ஆணையம் உடனடியாக அதன் தற்போதைய நடைமுறைகளை ஆய்வு செய்து சரிசெய்ய வேண்டும் என கோருகிறார்கள். மேலும் ஆணையத்தின் தற்போதைய சோதனை உத்திகள் மற்றும் தரக்கட்டுப்பாடு உத்தரவாதம் எந்த விதத்திலும் முடிவு அறிவிப்பில் தந்திரங்கள் மற்றும் குளறுபடிகள் ஏற்படாமல் தடுத்து விடும் என்பதற்கான வாய்ப்பு இல்லை என்பதைத் தெளிவாகவே கள நிபுணர்கள் தெரிவித்துள்ளார்கள். .

The VVPAT (Voter Verifiable Paper Audit Trail) எனப்படும் வாக்காளர் ஒப்புகை சீட்டு இயந்திரம் அதனுடன் இணைக்கப்பட்ட பிரிண்டர் மூலம் வாக்காளர் அளித்த வாக்கு விவரத்தை அச்சடித்து காணத் தரும் என்பதற்காக அறிமுகம் செய்யப்பட்டது. தாங்கள் செலுத்திய வாக்கு சரிவர பதியப்படுவதை நேரிடையாக வாக்காளர் காண உதவுவதால், உச்ச நீதி மன்றமும் இதனை கூடுதல் வசதியாக பயன்படுத்த உத்தரவிட்டது. ஆனால் தற்போதைய நடைமுறையானது , இடைவெளிகள் விடுவதன் மூலம் அதனை பிறர் தந்திரமாக பயன்படுத்தும் சாத்தியம் உருவாக்கி எந்த நோக்கத்தில் இது அறிமுகம் செய்யப்பட்டதோ அதனையே குலைத்து விடுகிறது. அச்சடிக்கப்பட்டு வெளிப்படும் ஸ்லிப வாக்காளர் சரிபார்க்கும் முன்பே சீல் வைக்கப்பட்ட பெட்டியில் விழுந்து விடுமாறு குறைந்த கால அளவிலியே செட் செய்யப்பட்டுள்ளது. மின்னணு முடிவுகளையும் அச்சடிக்கப்பட்ட முடிவுகளையும் ஒப்பு நோக்கி சரி பார்க்க தேர்தல் ஆணையம் தயங்குகிறது. கால விரையம் என்று காரணம் சொல்லப்பட்டாலும் இந்த

நடைமுறையில் முன்பு வாக்குசீட்டுகள் எண்ண எடுத்து கொண்ட காலத்தை விடவும் நேரம் குறைவாகவே பிடிக்கும். வாக்காளர் ஒப்புகை சீட்டு இயந்திரத்தில் இருக்கும் சீட்டுகள் தேர்தல் முடிந்து ஒரு வருடம் வரை பாதுகாக்கப்பட வேண்டும் என்று இருக்க, 2019 நிகழ்வில் ஆணையம் குறித்த காலம் முன்பாகவே அவற்றை அழித்து விட்டு தேர்தல் நடைமுறை குறித்த பெரும் ஐயப்பாடுகளுக்கு இலக்கானது.. மின்னணு வாக்குகளை மறுபடி எண்ணுதல் மற்றும் ஒப்புகை சீட்டுகளை கட்டாயமாக எண்ணுதல் ஆகியவை சரிவர பின்பற்றப்பட வேண்டும். இதற்காக ஆகும் காலம் தேர்தல் நடைமுறைகளுக்கு ஒரு தடங்கல் என்று கருதப்படக்கூடாது.

தேர்தலுக்கான பிரஜைகள் ஆணையத்தின் கள நிபுணர்கள் முன்வைக்கும் ஆலோசனைகளும் கவலைகளும்:

1) <u>முழுமையான சரிபார்ப்பு</u>: ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு தயாரிக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கும் சோதனை வடிவங்கள் @மூலம் மின்னணு வாக்கு இயந்திரத்தின் நம்பகத்தன்மையை சரிபார்த்தல் போதுமானதாக இல்லை. தற்போதைய மின்னணு இயந்திரம் சரிபார்க்க முடியாமல் வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே ஒரு ஜனநாயக தேர்தல் நடத்த இது தகுதி அற்றது. மென்பொருள் மற்றும் வன்பொருள் இடையில் சுதந்திரமாக இருக்கும் விதத்தில் , அனைத்து வகையிலும் சரிபார்க்க கூடிய வகையில், உத்தரவாதத்துடன் கூடிய இயந்திரங்களை ஆணையம் அறிமுகப்படுத்த வேண்டும். கள்ள வோட்டுகள் இதில் போட முடியாது என்ற உத்தரவாதம் பெற்று அதனை பொது வெளியில் ஊர்ஜிதம் செய்யத் தக்க வகையில் அறிவிக்க வேண்டும்.

2) மின்னணு இயந்திரம் சரியாகத்தான் உள்ளது என்பதை நிருபிக்கா விட்டால் அதனை ஊடுருவ முடியுமா முடியாதா என்று கணிப்பது இயலாத காரியம். இதுவரை எந்த எந்திரமும் ஊடுருவப்பட்டது கண்டுபிடிக்கப்படவில்லை என்பது இனிமேல் எப்போதும் அப்படி ஊடுருவப்பட வாய்ப்பில்லை என்று உத்தரவாதம் கொடுத்ததாக ஆகி விடாது. மின்னணு இயந்திரம் ஊடுருவப்பட வாய்ப்பு உள்ளது என்று எடுத்துக் கொண்டே தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

3) தேர்தல் முடிந்த பின் மின்னணு வாக்குகளின் எண்ணிக்கை ஒப்புகை சீட்டுகளின் எண்ணிக்கையுடன் ஒத்துப் போகிறதா என்று சரிபார்க்கப்பட வேண்டும். போட்டி குறைந்த ஒட்டு வித்தியாசத்தில் ஓடிக் கொண்டிருக்கும் போது ஒரு சில மின்னணு இயந்திரங்களில் ஊடுருவினலே வெற்றியின் போக்கை மாற்றி விட முடியும். எனவே 30 சத மின்னணு இயந்திரங்கள் சோதிக்கப்பட வேண்டும் எனும் சிவில் சொசைட்டியின் கோரிக்கை மற்றும் 50 சத மின்னணு இயந்திரங்கள் சோதிக்கப்பட வேண்டும் எனும் அரசியல் கட்சிகளின் கோரிக்கை ஆகியவை தாண்டியும் அதிக அளவில் சோதித்து நம்பகத்தன்மை கொண்ட முடிவுகள் வெளியிட அவசியம் உள்ளது.

4) முடிவுகள் அறிவிக்கப்படும் முன்பு மின்னணு வாக்குகளின் எண்ணிக்கை கவனமாக ஆய்வு செய்யப்பட வேண்டும். இது தற்காலிக முறைகளின்படி அல்லாது புள்ளி விவர தொழில் நுட்ப அடிப்படையில் கடுமையாக சோதனைக்கு உட்படுத்தப்பட்டு ஆய்வு நடத்தப்பட வேண்டும். சமயங்களில் வெற்றியின் மார்ஜினைப் பொறுத்து ஒப்புகை சீட்டுகள் முழுவதும் கைப்பட எண்ணப்படவேண்டிய தேவை ஏற்படலாம்.

தேர்தலுக்கான பிரஜைகள் ஆணையம் இந்த தேசத்தின் ஜனநாயக மாண்பினை உயர்த்திப்பிடிக்க ஒவ்வொரு குடி மகனும் தனது வாக்கினை மிகுந்த பொறுப்புணர்வுடன் செலுத்த வேண்டும் என்று கேட்டு கொள்கிறது. இந்த நோக்கத்துடன்தான் ஐந்து மாநிலங்களுக்கு தேர்தல் நடைபெற உள்ள முக்கியமான இந்த காலகட்டத்தில் இந்த அறிக்கை பொது மக்கள் முன் சமர்ப்பிக்கப்படுகிறது.